யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன் - 2015
## Term Examination, June - 2015

| கிறிஸ்தவ நாகரிகம் | **புள்ளித்திட்டம்** | தரம் :- 13 (2015) |
|---|---|---|

### பகுதி - I

| | | | | |
|---|---|---|---|---|
| *01) 5* | *11) 5* | *21) 1* | *31) 2* | *41) 2* |
| *02) 3* | *12) 2* | *22) 4* | *32) 5* | *42) 4* |
| *03) 1* | *13) 3* | *23) 5* | *33) 3* | *43) 3* |
| *04) 2* | *14) 2* | *24) 4* | *34) 2* | *44) 5* |
| *05) 3* | *15) 2* | *25) 4* | *35) 4* | *45) 4* |
| *06) 4* | *16) 2* | *26) 2* | *36) 5* | *46) 3* |
| *07) 3* | *17) 3* | *27) 1* | *37) 4* | *47) 2* |
| *08) 1* | *18) 2* | *28) 4* | *38) 1* | *48) 2* |
| *09) 1* | *19) 3* | *29) 4* | *39) 4* | *49) 2* |
| *10) 2* | *20) 3* | *30) 3* | *40) 1* | *50) 3* |

(2 x 50 = 100 புள்ளிகள்)

### பகுதி - II

*01)*

i)
- ✶ பெந்தக்கோஸ்து விழாவுக்கு பல நாடுகளிலிருந்து வந்திருந்தவர்கள் நற்செய்தியை ஏற்றுக்கொண்டு சென்ற இடங்களில் எல்லாம் கிறிஸ்தவத்தை பறைசாற்றினர்.
- ✶ ஸ்தேவானின் மரணத்தின் பின் சிதறி ஓடியவர்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தி பரப்பியமை.
- ✶ உரோமை இராச்சியத்தில் காணப்பட்ட வீதி, கடல்வழி போக்குவரத்து வசதிகள்
- ✶ பவுலின் வேதபோதகப் பயணங்கள்
- ✶ எருசலேம் சங்கத் தீர்மானம்

*(4 எழுதியிருப்பின் - 4 புள்ளி வழங்கவும்)*

ii)
நிசேயா சங்கம் - வார்த்தை ஒரே பொருளானவர். அவர் மெய்யான கடவுளாக இருக்கிறார்.

எபேசு சங்கம் - இயேசு கடவுளாகவும் மனிதனாகவும் உள்ளார். கன்னிமரியாள் இறைவனின் தாய்

கல்சடோன் சங்கம் - இயேசு இறைத் தன்மையும், மனிதத் தன்மையும் கொண்டவர். இவ்விரு இயல்புகளும் மாறுபடாமல் அவரில் இணைந்துள்ளன.

கொன்ஸ்தாந்து நோபிள் சங்கம் - தூய ஆவி கடவுள் என்ற தன்மை வலியுறுத்தப்பட்டு பிதாவினின்றும் சுதனின்றும் ........... என்ற அறிக்கை சேர்க்கப்பட்டது. ஒரே கடவுள் கொள்கை வலியுறுத்தப்பட்டது. *(4 புள்ளி)*

iii) ✶ பல துறவிகள் இல்லங்களின் அமைப்பாளராக விளங்கினார்.
✶ ஸ்கொட்லாந்தின் அப்போஸ்தலர்
✶ அயனா தீவில் மறைத் தொண்டாற்றினார்
✶ பிக்கு இனத்தை மனம் திருப்பினார்
✶ மன்னர் புருட்டையும் அவர் குடிமக்கள் பலரையும் மனம் திருப்பி திருச்சபையில் சேர்த்தார். (4 புள்ளி)

iv) ✶ யூத மதத்தவரிடையே விருத்தசேதன சட்டம் அவசியமானதால் சட்டத்தை எதிர்க்கிறார் என்னும் அவதூறு
✶ பிலிப்பியில் சிறையில் அடைக்கப்படல்
✶ தெசலோனிக்காவில் கலகக்காரர்களினால் அச்சுறுத்தப்படல்
✶ ஏதென்சில் ஏளனம் செய்யப்படல்
✶ கொரிந்தில் யூதர்களால் புறக்கணிக்கப்படல் (4 புள்ளி)

v) ✶ ஒழுங்கற்ற மேற்பார்வை
✶ தனித்துவமான தலைமையின்மை
✶ அடிக்கடி தமக்குள் போரிடல்
✶ நான்காம் சிலுவைப் போரில் கிறிஸ்தவர்களை பாதுகாக்கச் சென்றவர்கள் கொன்ஸ்தாந்திநோபிளை கொள்ளையிட்டமை
✶ சிலுவைப் போரில் பங்குபற்றியவர்களிடையே முரண்பட்ட நோக்கங்கள்
✶ இதில் பங்கு பற்றிய மானிய பிரபுக்களின் நோக்கம்
✶ பொருளாதார நலன்களை சார்ந்ததாக இருந்தமை (4 புள்ளி)

(4 x 5 = 20 புள்ளிகள்)

*02)*

i) மறைபரப்புப்பணி, மிலேச்சர்களை சீர்திருத்தும் பணி, கல்விப் பணி, கலை கலாசார விவசாய கைத்தொழில் மேம்பாடு (4 புள்ளி)

ii) ✶ அரசியல் தலைவர்களுக்கு தேவை ஏற்படும் பட்சத்தில் அறிவுரை வழங்கினார்.
✶ பரிசுத்த தந்தைக்கு மறை தொடர்பான அறிவுரைகளை வழங்கினார்.
✶ மறை மாவட்ட ஆயர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு ஒத்தழைப்பு வழங்கி செயற்பட்டார்.
✶ ஸ்பானியாவில் துறவற வாழ்வை கட்டியெழுப்பும் நோக்குடன் ஆர்வமுடன் செயற்பட்டார். (4 புள்ளி)

iii) ✶ இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் ஏனைய இடங்களிலும் சமூக சீர்திருத்தங்கள் ஏற்பட்டன.
✶ யோவான் ஹவார்ட் சிறைச்சாலைகளில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார்.
✶ றொபர்ட் றேய்க்ஸ் ஓய்வுநாள் பாடசாலையை உருவாக்கினார்.
✶ கிறிஸ்தவ இலக்கியம் உயிர்பெற்றுத் தழைத்தது.
✶ பல புதிய மிஷனரி சங்கங்கள் தோன்றின. (4 புள்ளி)

iv) ✶ திரிதெந்தின் சங்கம் கூட்டப்பட்டது.
✶ திருச்சபையின் ஒழுங்குகள், கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன.
✶ குருக்களுக்கான குருமடம் உருவாக்கப்பட்டு, புதிய துறவற சபைகள் உருவாக்கப்பட்டன.
✶ வெளிநாட்டிற்கு வேதபோதக பணியாளர்கள் அனுப்பப்பட்டு திருச்சபையின் படிப்பினைகள் தெளிவுபடுத்தப்பட்டன.
✶ பங்குப் பணிவாழ்வு புதுப்பிக்கப்பட்டதுடன் திருவிவிலியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. (4 புள்ளி)

v) ✶ இவர் பேரு நாட்டின் மக்களுக்கு திருமுழுக்கும் உறுதிப்பூசுதலும் கொடுத்தார்.
✶ அமெரிக்காவில் குருக்களைப் பயிற்றுவிப்பதற்காக குருமடங்களை அமைத்துக் கொடுத்தார்.
✶ அப்பிரதேசத்தில் வாழ்ந்தவர்களுக்கு சுயதொழிற் பயிற்சி பெற்றுக் கொடுத்தார்.
✶ ஆலயப் பணி செய்வதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது. (4 புள்ளி)

03)

i)
- ✶ பௌத்த இந்துப் பாடசாலைகள்
- ✶ திண்ணைப் பள்ளிக்கூடங்கள்
- ✶ கோயில் மடப் பள்ளிக்கூடங்கள்
- ✶ மரநிழற் பள்ளிக்கூடங்கள் (4 புள்ளி)

ii) நன்மைகள் :-
- ✶ தேசிய மறைபணி (கல்வி) நிலையம் ஆரம்பிக்கப்பட்டது
- ✶ மறை பாடசாலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டது
- ✶ சமய பாடத்திற்கான புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டன.
- ✶ சமய பாடம் கற்பிப்பதற்கு கத்தோலிக்க ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

தீமைகள் :-
- ✶ கத்தோலிக்க சமயத்தை பாடசாலைகளில் கற்பிப்பதற்கு சுதந்திரம் இல்லாமற் போனது.
- ✶ பாடசாலை நிர்வாகம் ஒழுக்கம் பற்றி கத்தோலிக்க திருச்சபைக்கு இருந்த உரிமை இல்லாமல் போனது.
- ✶ கத்தோலிக்க ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் உரிமை அற்றுப் போயின.
- ✶ சமயத்தை கற்பிக்கும் பாடவேளை இரண்டாக மட்டுப்படுத்தப்பட்டது. (4 புள்ளி)

iii)
- ✶ கிறிஸ்தியானி ஆலயம்
- ✶ தேவ அருள் வேதபுராணம்
- ✶ சத்திய வேதாகம சங்ஷேபம்
- ✶ சுவிசேஷ விரித்திரை
- ✶ வியாகுல பிரசங்கம்
- ✶ தர்ம உத்தியானம் (4 புள்ளி)

iv)
- ✶ கடவுள் - அன்பு நிறைந்த தந்தை
- ✶ மனிதன் - இறைசாயலாகப் படைக்கப்பட்டுள்ளான்
- ✶ திருச்சபை - உலகில் உயிர்த்த கிறிஸ்துவின் பிரசன்னம்
- ✶ உலகம் - மனுக்குலம் முழுவதும் ஒரே குடும்பமாக வாழ்தல் (4 புள்ளி)

v)
- ✶ இறைமக்கள் வழிபாட்டில் ஆர்வத்துடனும், பயனுள்ள வகையிலும் பங்குகொள்ள வழிவகுத்தது
- ✶ வழிபாடுகள் சுதேச மொழியில் நடாத்தப்படல்
- ✶ சுதேச மரபிலான வழிபாட்டு மரபுகளை கடைப்பிடிக்க
- ✶ சுதேச கலை, அலங்காரம், இலக்கியம் வழிபாட்டில் இடம்பெற்ற வாய்ப்பு ஏற்பட்டது. (4 புள்ளி)

## பகுதி II

04)

i)
- ✶ மனிதன் சட்டத்தை அனுசரிப்பதால் அல்ல. மாறாக இயேசுக்கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தினால் மட்டுமே கடவுளுக்கு ஏற்புடையவன் ஆதல்.
- ✶ ஏற்புடமை இறைவனின் இரக்கச் செயல், இறைவனின் அன்புக்கொடை
- ✶ இயேசுவின் கல்வாரிப்பலி மூலம் இலவசமாய் இறையருளால் மனிதன் இறைவனுக்கு ஏற்புடையவன் ஆகிறான்.
- ✶ சட்டம் கடவுளிடமிருந்து வருவது, புனிதமானது நல்லது. ஆன்மீகமானது. ஆனால் ஊனியல்பான மனிதனை மீட்க முடியாது.
- ✶ சட்டம் தான் பாவத்திற்கு உயிர் கொடுக்கிறது
- ✶ எமக்கு சட்டம் கிடைப்பதற்கு நானூற்று முப்பது ஆண்டுளுக்கு முன்னதாகவே ஆபிரகாம் தம் விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவரானார் (5 புள்ளி)

ii) இறைமேன்மை :- 'கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை' கடவுள் வடிவில் விளங்கிய அவர் என்பதன் பொருள் இயேசு அடிப்படையில் மாற்றடியாத தெய்வீக இயல்பை உடையவர்.

மனுவுருவில் வெறுமையாதல் :-

"தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்" அவர் மனுஷீகத்தை எடுப்பதற்காக தானாக விரும்பி தன்னுடைய தெய்வீகத்தை முற்று முழுவதும் வெறுமையாக்கினார். *(5 புள்ளி)*

iii) *1 கொரிந்தியர் 7 : 12 - 15* *(5 புள்ளி)*

iv) பெற்றோர், அரசியல் அதிகாரிகள், கிறிஸ்தவர்கள் பற்பல துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள், குருக்கள் (இவை போன்றவை நான்கு குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்) (5 x 4 = 20 புள்ளிகள்)

*05)*

i)
- ✶ திருத்தூதர் காலத்தில் இருந்த புனித வாழ்வு, பகிர்வு வாழ்வு, மறைந்து ஆயர்கள் குருக்களின் ஆடம்பர வாழ்வு, பணம் பேராசை திருச்சபையின் தூய்மைக்கும் வளர்ச்சிக்கும் தடையாக இருந்தன.
- ✶ திருத்தந்தையர்கள் அக்கால அரசர்களுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது.
- ✶ குருக்களும் திருத்தொண்டர்களும் போதிய கல்வி அறிவு பெற்றிருக்கவில்லை.
- ✶ பொதுநிலையினர் திருச்சபையின் புதுப்பித்தல் வாழ்விற்குள் ஈடுபடுத்தப்படவில்லை
- ✶ திருச்சபையில் ஆன்மீக நாட்டங்களில் ஈடுபாடு குறைவாக காணப்பட்டது. *(5 புள்ளி)*

ii)
- ✶ தோமஸ் முன்ற்சர் கி. பி. 1488 இல் ஜேர்மனியில் பிறந்தார்.
- ✶ கிரேக்கம், எபிரேயம், இலத்தீன் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றார்.
- ✶ 'திருவிலியம் தொடரும் இறை வெளிப்பாடும்' என்ற கொள்கையை வலியுறுத்தினார்.
- ✶ இவர் சமூக அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த ஊக்குவித்தார்
- ✶ மரியாளின் பாடலில் வரும் "தாழ்நிலையைக் கண்ணோக்கினார்" எனும் வார்த்தைகளைப் பயன்படுத்தி பெண்ணியல் விடுதலைக்காக குரல் கொடுத்தார்.
- ✶ அரசர்களுக்கான அருளுரை என்ற தனது போதனையில் தானியேல் ஆகமத்தின் 2ம் அதிகாரத்தை மையமாகக் கொண்டு அரசரின் கனவுகளை விளக்கும் புதிய தானியலாகத் தம்மை வெளிப்படுத்தினார்.
- ✶ 'எல்லாம் பொதுவானவை என்ற போர்க்குரலை எழுப்பினார்
- ✶ இறை நீதியையும் திருவிவிலியத்தையும் அடிப்படையாகக் கொண்ட நிரந்தர ஆட்சி மன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற மக்களின் கொள்கையை ஆதரித்தார். *(5 புள்ளி)*

iii)
- ✶ இவர்கள் தமது போதிக்கும் பணியையும் மடவாச வாழ்க்கையையும் இணைத்து வாழ்ந்தனர்.
- ✶ நோயாளரைப் பராமரிப்பதிலும், கடின உழைப்பாலும் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தனர்
- ✶ புரட்டஸ்தாந்து சீர்திருத்த வாதிகளுக்கு எதிராகப் போதித்தார்
- ✶ எளிமையான வாழ்வு வாழ்ந்தனர்
- ✶ சாதாரண மக்கள் மட்டத்தில் நின்று அவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் மறையுரையாற்றினர்
- ✶ பல மறைதூதுப் பயணங்களை மேற்கொண்டு ஏழைகளுக்கு உதவி செய்தனர் *(5 புள்ளி)*

iv) ✶ மனித சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது

✶ மனிதன் இறைவனுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம் என்ற கருத்து மேலோங்கியது

✶ திருவிவிலியம் விசுவாசத்தின் அடிப்படையாக அமைத்தது

✶ அடிமைநிலை படிப்படியாக மறைந்தது

✶ நடுத்தர வகுப்பினர் உருவாயினர்

✶ கல்வி தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வழிவகுத்தது (5 புள்ளி)

06)

i) ✶ கிரகோரியாரின் காலத்தின் முறை

✶ பொலிபோனி இசைமுறை

✶ மார்செலஸ் திருத்தந்தையின் இசை திருப்பலி

✶ ஓரதோரியோ இசை

(இவற்றுள் இரண்டு குறிப்பிட்டு விளக்கி எழுதியிருப்பின 5 புள்ளி வழங்கவும்)

ii) ✶ அகலத்தை விட நீளம் கூடிய செவ்வக வடிவமான கட்டிடங்கள்

✶ ஆலயத்திற்கு நுழைந்தவுடன் கண்ணுக்குத் தெரிவது எதிர்ப்பக்கத்தில் அரைவட்ட வடிவான குகையில் அமைந்திருக்கும் பலிப்பீடமாகும்.

✶ இரண்டு வரிசைகளில் அமைந்துள்ள உயரமான தூண்கள் கூரையை தாங்கியுள்ளன. ஆலய நிலப்பகுதி மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இதன்படி பிரதான நடுப்பகுதியில் மண்டபமும், குறுகிய இரண்டு பகுதிகள் இரண்டு பக்கங்களிலும் அமைக்கப்பட்டன. (நேவி, அயல்) சிறகுப் பகுதிக்கும் நடுப்பகுதிக்குமிடையிலுள்ள தூண்களில் செய்யப்பட்ட சுவர்களிலுள்ள ஜன்னல் வழியாக வெளிச்சம் உள்ளே வந்தது. (5 புள்ளி)

iii) ✶ பிரெஸ்கோ சித்திரம் அல்லது புதிய சுவர்களில் பூச்சு காய்வதற்கு முன்னர் ஓவியம் வரைதல் முறையை கண்டு படித்தார்.

✶ இவரின் பிரஸ்கோ ஓவியங்களில் பிரசித்தி பெற்றது புளோரன்ஸ் நகரத்திலுள்ள புனித பிரான்சிஸ் அசீசியாரின் ஆலயத்தின் ஓவியங்களில் காணப்படும் பண்புகள்

✶ உயிரூட்டமுள்ள மனிதர்

✶ மரங்கள் மலைகள் இவைகளினால் பின்னணி அலங்கரிக்கப்பட்டுள்ளது.

✶ பல வர்ண சிறகுகளுடைய பறவைகளை வைரந்து இயற்கை இரசனையை ஏற்படுத்தியுள்ளார். (5 புள்ளி)

iv) மொசேயிக்கலை, வர்ணக் கண்ணாடிக்கலை (இரண்டும் விளக்கி எழுதியிருப்பின் 5 புள்ளி வழங்கவும்) (5 x 4 = 20 புள்ளிகள்)

07)

i) ✶ மறைபரப்பாளர்களின் ஆழ்ந்த அர்ப்பணிப்பும் முயற்சியும்

✶ சுதேச மொழிகளை கற்றுக் கொண்டமை

✶ மறைத்தூதுவரின் மறைப்பிரச்சார முறை

✶ சமய நூல்களை தேசிய மொழியில் தயாரித்தமை

✶ பல்வேறு இரக்கப் பணிகளில் ஈடுபட்டமை

✶ மறை தூதுவரின் எளிமையான முன்மாதிரிகையான வாழ்க்கை (5 புள்ளி)

ii) ✶ ஹென்றி ஹென்றிக்கஸ், டி நொபிலி தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களை உருவாக்கியுள்ளனர்.

✶ சந்தியோகு மாயோர் அம்மானை

✶ ஞானப் பள்ளு

(இவைகள் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளி வழங்கவும்)

iii) அருட்திரு யோசவ்வாஸ் அடிகளார், ஜாகோமே கொன்சால்வெஸ் அடிகளார் (இவர்களின் பணிகள் எழுதியிருப்பின் 5 புள்ளி வழங்கவும்)

iv)
- ✶ 1969 இல் கொண்டு வரப்பட்ட புதிய கல்வித்துறை மசோதாவின் காரணமாக கல்விப் பொதுத் திணைக்களம் அமைக்கப்பட்டது.
- ✶ நகர்ப்புறங்களில் உயர்தரக் கல்லூரிகள் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டன.
- ✶ கத்தோலிக்க பாடசாலைகளைக் கண்காணிப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது முகாமையாளர் நியமிக்கப்பட்டதோடு ஒவ்வொரு பங்குத் தந்தையும் பொது முகாமையாளரின் பிரதிநிதியாக செயல்படல்
- ✶ கத்தோலிக்க ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கென ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் மக்கோனா, போலவலானை, கொழும்புத்துறை போன்ற இடங்களில் அமைக்கப்படலாயின.
- ✶ கல்வி நிறுவனங்களை கண்காணிக்க பல ஆண், பெண் துறவற சபைகள் முன்வந்தன. (5 புள்ளி)

08)

i)
- ✶ மனிதன் சமூக பொருளாதார வாழ்வின் மையமும் குறிகோளுமாயிருக்கிறான்
- ✶ தொழில்துறை, கைத்தொழில்துறை முன்னேற்றம் அனைத்தும் மனித குலத்தின் நன்மைக்காக பயன்படுத்த வேண்டும்.
- ✶ மனிதனின் உடல் உள ஆன்மீகத் தேவைகள் கருத்தில் கொள்ள வேண்டும்.
- ✶ தொழிலாளரின் வேதனம் வேலை செய்வதற்கான நிபந்தனை பற்றி நேர்மையான தீர்மானம் எடுத்தல்
- ✶ தொழிலாளர் இயேசுவின் மீட்புப் பணியில் இணைகின்றனர் என்பதை விசுவசித்தல் (5 புள்ளி)

ii)
- ✶ மனிதப் பண்பாடு, வரலாறு சமூகம் சார்ந்த அம்சங்களுடன் இணைந்து வளரும் பண்பைத் தன்னிலே கொண்டுள்ளது.
- ✶ இறைவன் மனுவுரு எடுத்த தனது மகனின் வழியாகவும், பல்வேறு பண்பாடுகள் ஊடாகவும், பல்வேறு காலங்களுடன் தொடர்புள்ள மக்கள் வழியாகவும் பேசினார்
- ✶ உலகைப் படைத்த இறைவனின் திட்டப்படி அறிவு, குறிக்கோள், மனச்சான்று, சகோதரத்துவம் என்பவற்றின் விழுமியங்கள் கிறிஸ்துவில் விசேட விதமாக புதுப்பிக்கப்பட்டு உயர்நிலைக்கு உயர்த்தப்பட்டது. (5 புள்ளி)

iii) விடைக்கேற்ப புள்ளி வழங்கவும் (5 புள்ளி)

iv)
- ✶ 1970 நவம்பர் மாதத்தில் திருத்தந்தை 6ம் சின்னப்பரை சந்திக்க மணிலா நகரில் ஒன்று கூடும் வாய்ப்பு ஆசிய ஆயர்களுக்கு கிடைத்தது. 180 ஆசிய ஆயர்கள் கலந்து கொண்டனர். இவ் ஒன்றுகூடலில் ஆசிய ஆயர்கள் மன்றத்தின் கூட்டமைப்பு (ABM) உருவாக்கப்படல்.
- ✶ 1971 மார்ச் மாதம் ஆசிய ஆயர்கள் பேரவை நிறுவுவதற்கான கலந்துரையாடல் Hong Kong இல் இடம் பெற்றது.
- ✶ ஆசிய ஆயர் பேரவையில் இயல்பு நோக்கு செயற்திட்டம் வரையறைகள் பற்றிய ஆலோசனைகள் கலந்துரையாடப்பட்டன.
- ✶ 1972 நவம்பர் மாதத்தில் ஆசிய ஆயர்கள் பேரவை (FABC) அதிகார பூர்வமாக வத்திக்கானில் திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. (5 புள்ளி)